සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

නර්තනය (භරත) I
நாட்டியம் (பரதம்) I
Dancing (Bharatha) I

53 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

- ※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** நடராஜமூர்த்தி வலது காலைத்தூக்கி நின்றாடிக் காட்சியளித்த கோயில்
(1) தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயில்
(2) சிதம்பரம் நடராஜமூர்த்தி கோயில்
(3) மதுரை மீனாட்சி சுந்தரேசர் கோயில்
(4) கங்கை கொண்ட சோழபுரீஸ்வரர் கோயில்
(5) வழுவூர் ஞானசபேசர் கோயில்

**2.** சாஸ்திரிய நடனமாகிய கதகளியில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகளில் ஒன்று
(1) வீணை (2) புல்லாங்குழல் (3) தபேலா (4) எலத்தாளம் (5) சாரங்கி

**3.** ஸ்தானக பேதங்களில் ஒன்று
(1) பிரேங்கணம் (2) ஸ்வஸ்திகம் (3) ஐந்தரம்
(4) லுடிதம் (5) அஷ்வோத்பிளவனம்

**4.** தனது எண்ணங்களையும் ஆசைகளையும் வெளிப்படையாகப் புலம்புபவள்
(1) அனுசயானை (2) குப்தை (3) விதக்தை (4) லஷிதை (5) முதிதை

**5.** நாட்டிய சாலைகள் 'சங்கீத மஹால்' என அழைக்கப்பட்ட வரலாற்றுக் காலம்
(1) மராட்டியர் காலம் (2) சங்கமருவிய காலம் (3) சங்க காலம்
(4) பல்லவர் காலம் (5) சோழர் காலம்

**6.** மருதநிலக் குரவை பற்றிக் கூறும் சங்க இலக்கியம்
(1) பதிற்றுப்பத்து (2) ஐங்குறுநூறு (3) புறநானூறு
(4) அகநானூறு (5) கலித்தொகை

**7.** ரௌத்திர ரஸத்தினை வெளிப்படுத்தும் இராகங்கள்
(1) லதாங்கி, பெஹாக், சாரங்கா
(2) அடானா, ஆரபி, வசந்தா
(3) கானடா, சுபபந்துவராளி, ரஞ்சனி
(4) மோஹனம், காபி, கேதாரம்
(5) முகாரி, ஸஹானா, ஆஹிரி

[பக். 2 ஐப் பார்க்க

**8.** திரிகூட ராசப்பக் கவிராயரால் எழுதப்பட்ட குறவஞ்சி
(1) கும்பேசர் குறவஞ்சி
(2) தியாகேசர் குறவஞ்சி
(3) திருக்குற்றாலக் குறவஞ்சி
(4) சிவன்மலைக் குறவஞ்சி
(5) மோகினி விலாசக் குறவஞ்சி

**9.** காற்றுக் கருவிகளுள் ஒன்று
(1) உடுக்கு (2) தப்பு (3) மத்தளம் (4) சங்கு (5) சேமக்கலம்

**10.** ஆலீடம் என்னும் பாதநிலையை மட்டும் பயன்படுத்திச் செய்யப்படும் அடவு
(1) தட்டடவு (2) நாட்டடவு
(3) குதித்து மெட்டடவு (4) மண்டியடவு
(5) தட்டு மெட்டடவு

**11.** த க த திங் கி ண தொம், த திங் கிண தொம், கிண தொம் என வரும் முடிவுத்தீர்மானம் சுட்டும் யதி அமைப்பு
(1) மிருதங்க யதி (2) டமருக யதி (3) விசம யதி
(4) கோபுச்ச யதி (5) சம யதி

**12.** 'மண்டல பஞ்ஜி' என்ற கால ஏடு குறிப்பிடும் சாஸ்திரிய நடனம்
(1) பரதநாட்டியம் (2) குச்சுப்புடி (3) ஒடிசி (4) கதகளி (5) மணிப்புரி

**13.** சங்க இலக்கியங்களில் **இடம்பெறாத** இசைக்கருவிகளில் ஒன்று
(1) பறை (2) பிடில் (3) குழல் (4) முரசு (5) பதலை

**14.** மிஸ்ரஜாதி அடதாளம் கண்ட கதியுடன் சேரும்போது வரும் மாத்திரைகள்
(1) 55 (2) 80 (3) 90 (4) 115 (5) 120

**15.** நாட்டியாச்சாரியரான மேலத்தூர் ஏ.பி. நடேச ஐயரிடம் சதிர், பாகவத மேளம், ஹரிகதாகாலஷேபம் ஆகியவற்றை வரண் முறைப்படி முழுமையாகக் கற்ற நடனக் கலைஞர்
(1) பந்தனை நல்லூர் சபாரஞ்சிதம்
(2) பாலசரஸ்வதி
(3) தஞ்சாவூர் சுப்பராய நட்டுவனார்
(4) ஸ்ரீமதி ருக்மிணிதேவி அருண்டேல்
(5) ஈ. கிருஷ்ணய்யர்

**16.** இசைக் கச்சேரிகளிலும் நாட்டியக் கச்சேரிகளிலும் இறுதியாக இடம்பெறும் உருப்படி
(1) தில்லானா (2) பதம் (3) அஷ்டபதி (4) கீர்த்தனம் (5) வர்ணம்

**17.** சந்திரலேகா, சக்ரதாரி ஆகிய திரைப்படங்களில் நடனம் ஆடும் வாய்ப்பினைப் பெற்றுக்கொண்ட நடனக்கலைஞர்
(1) அடையாறு. கே. லக்ஷ்மணன்
(2) ஏரம்பு சுப்பையா
(3) விஜய் மாதவன்
(4) சூரிய நாராயணமூர்த்தி
(5) வி. கே. நல்லையா

**18.** ; ; ; ; ;, த, திங், கி / ண தொம் த, திங், கிண / தொம் த, திங், கி ண தொம் // இங்கு குறிப்பிடப்பட்டுள்ளபடி தாளங்கத்தில் அமையக்கூடிய ததிங்கிண தொம் அமைந்துள்ள ஜாதி
(1) மிஸ்ரம் (2) கண்டம் (3) திஸ்ரம் (4) சதுஸ்ரம் (5) சங்கீர்ணம்

[பக். 3 ஐப் பார்க்க

2282

**19.** 'வாசகசஜ்ஜிகா' எனும் நாயகியின் குணவியல்புகளை வெளிப்படுத்துவதற்கு அபிநயிக்கப்படவேண்டிய செய்கைகள்
(1) பூஞ்சோலையில் உலாவுதல், ஜலக்கிரீடை
(2) தன் நாயகன் எப்போது வருவான் என்று அலைதல், உடம்பு இளைத்தல்
(3) பெருமூச்செறிதல், பேசாதிருத்தல்
(4) ஆடை, அணிகலன் அணிந்து தன்னை அலங்கரித்தல், நாயகன் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்தல்
(5) உணர்ச்சி வசப்படல், கண்ணீர் விடுதல், மயங்குதல்

**20.** 'தகும்தரி கிடதக' எனும் சொற்கட்டிற்குச் சமனாக அமையும் பிறிதொரு அமைப்பு
(1) தகிட தகிட (2) தகதகிட தகதகிட (3) தகதிமி தகிட
(4) தகதகிட தகதிமி (5) தகதிமி தகதிமி

**21.** ஆடலுடன் வசனம் பேசும் அம்சமும் காணப்படும் சாஸ்திரிய நடனம்
(1) குச்சுப்புடி (2) மணிப்புரி (3) ஒடிசி (4) கதகளி (5) கதக்

**22.** தெய்வங்களிடமிருந்து நன்மை பெறும் நோக்கத்துடன் ஆடப்படும் நடனம்
(1) முல் மாத்ரய (2) யாதினி மாத்ரய (3) பட்டுதல் மாத்ரய
(4) சிந்து மாத்ரய (5) யக்பத மாத்ரய

**23.** U O U இங்கு காட்டப்பட்டுள்ள குறியீடுகளின் அட்சர எண்ணிக்கை
(1) 03 (2) 04 (3) 05 (4) 06 (5) 07

**24.** வட இலங்கை சங்கீத சபையினால் 'நடன ஆசிரியமணி' எனும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்ட நடனக்கலைஞர்
(1) ஏரம்பு சுப்பையா (2) தொம்மைக்குட்டி (3) ந. இராசரத்தினம்
(4) வி. கே. நல்லையா (5) பிரம்மஶ்ரீ. வீரமணிஐயர்

**25.** யக்ஷகானத்தில் கண்களுக்குக் கீழாக மீன்வடிவத்தில் தட்டையாக சிவப்பு வண்ணத்தில் பூசப்படும் பாத்திரம்
(1) அருச்சுனன் (2) கர்ணன் (3) முனிவர் (4) கிருஷ்ணன் (5) கிராதகன்

**26.** 'கர்தார் சோளம்' என்னும் நடனம் என்பது
(1) 'டோல்கி' என்ற மத்தளத்தை தோளில் மாட்டிக் கொண்டு ஆடுதல்.
(2) செம்பைத் தலையில் வைத்துக்கொண்டு கைகளில் விளக்குகளை ஏற்றிக் கொண்டு ஆடுதல்.
(3) தாம்பாளத்தட்டின் விளிம்பில் நின்று ஆடுதல்.
(4) கண்களைக் கட்டிக்கொண்டு அரிசிமாவைத் தூவியுள்ள நிலத்தில் மயில் வரைதல்.
(5) பெரிய தாளங்களைத் தட்டிக் கொண்டு ஆடுதல்.

**27.** ; ; ; ; ; ; ; த திங் /, கிணதொம் த திங், கி / ண தொம் த திங், கிண தொம் // என்பதில் பஞ்சஜாதி 'ததிங் கிண தொம்' குறியீட்டில் எழுதப்பட வேண்டியது
(1) தகதிமி தகதிமி தகிட (2) தகிட தகிட தகிட தகிட
(3) தகதிமி தகதிமி தகதிமி தக (4) தகதிமி தகதிமி தகதிமி தகதிமி
(5) தகதிமி தகதிமி தகிட தக

**28.** நாட்டிய சாஸ்திரத்தில் இருபதாவது அத்தியாயத்தில் குறிப்பிடப்படும் விடயங்களாவன
(1) தஷவித நாடகங்கள் (2) பாத்திரங்களைத் தேர்ந்தெடுக்கும் முறை
(3) வாக்கியாபிநயம் (4) நால்வகைவிருத்தி
(5) தாளக்கருவிகள்

**29.** 'முருகா முருகா என்றால் உருகாதோ உந்தன் நெஞ்சம்...' என்னும் பாடலடியில் முருகனைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் முத்திரைகள்
(1) மயூரம் மயூரம் (2) மயூரம் அலபத்மம் (3) சிகரம் திரிசூலம்
(4) சிகரம் அலபத்மம் (5) திரிபதாகம் திரிபதாகம்

[பக். 4 ஐப் பார்க்க

**30.** பதினொரு வகை ஆடல்களில் பாரதியால் ஆடப்பட்ட ஆடல் வகை
(1) கொடுகொட்டி (2) அல்லியம் (3) மல்லாடல் (4) பேடி (5) பாண்டரங்கம்

**31.** 'அபஹஸித்தம்' என்பது
(1) புன்முறுவல் (2) இளநகை
(3) கண்ணீருடன் கூடிய சிரிப்பு (4) சிரிப்பு
(5) அட்டகாசமான சிரிப்பு

**32.** மெய்ப்பாட்டு உணர்ச்சிகளில் பிரளய என்பது குறித்து நிற்பது
(1) புல்லரித்தல் (2) மூர்ச்சித்தல் (3) வியர்த்தல் (4) நடுங்குதல் (5) கண்ணீர் சொரிதல்

**33.** சஞ்சீவம் என்பது எவ்வகை அபிநயத்தைச் சார்ந்தது?
(1) ஆங்கிகா அபிநயம் (2) வாச்சிகா அபிநயம்
(3) சாத்விகா அபிநயம் (4) ஆஹார்ய அபிநயம்
(5) நிஜகார்யா அபிநயம்

**34.** கோவலனை உதாரணமாகக் கொண்ட ஸ்ருங்கார நாயகன்
(1) வைசிகன் (2) உபபதி (3) பதி
(4) உத்தம நாயகன் (5) அனுகூலன்

**35.** "இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து பலவகைக் கூத்தும் விலக்கினில் புணர்ந்து" என்னும் பாடல் வரிகள் மூலம் வேத்தியல், பொதுவியல் பற்றி விளக்கும் நூல்
(1) தொல்காப்பியம் (2) சிலப்பதிகாரம் (3) பதிற்றுப் பத்து
(4) மணிமேகலை (5) ஐங்குறு நூறு

**36.** 'அபிநய அரசி' எனச் சிறப்பித்து அழைக்கப்படும் நடனக் கலைஞர்
(1) ஸ்ரீமதி ருக்மிணிதேவி அருண்டேல் (2) சாரதாம்பாள்
(3) ஸ்ரீமதி பாலசரஸ்வதி (4) பாக்கியாம்பாள்
(5) முத்துரத்தினாம்பாள்

**37.** வேகநடை, தாவல்நடை, பாய்ச்சல்நடை, தொங்குநடை, கெந்தல்நடை முதலியவை இடம்பெறும் ஆட்டவகை
(1) மானாட்டம் (2) மயிலாட்டம் (3) குதிரையாட்டம்
(4) பொம்மலாட்டம் (5) ஒயிலாட்டம்

**38.** பந்தனை நல்லூர் சபாரஞ்சிதம் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் நடைபெற்ற இடம்
(1) அருண ஜடேஸ்வரர் ஆலயம் (2) பசுபதீஸ்வரர் ஆலயம்
(3) பிரகதீஸ்வரர் ஆலயம் (4) கபாலீஸ்வரர் ஆலயம்
(5) கும்பேஸ்வரர் ஆலயம்

**39.** பரகீயா நாயகியின் வகைகளாவன
(1) தீரா, தீரா தீரா
(2) ஜ்ஞாத யௌவனா, அஜ்ஞாத யௌவனா
(3) தீரா, அதீரா, தீரா தீரா
(4) ஸ்வியா, சாமான்யா
(5) கன்னியா, பிரௌடா

**40.** "யாருக்காகிலும் பயமா சும்மா சொல்லட்டும் இதில் என்ன ரகசியம்" என்ற பாடலடிகள் மூலம் வெளிப்படுத்தப்படும் அஷ்டவித நாயகி
(1) அபிசாரிகா (2) கண்டிதா (3) கலகாந்தரிதா
(4) விரஹோத்கண்டிதா (5) ஸ்வாதீன பதிகா

[பக். 5 ஐப் பார்க்க

● **41** தொடக்கம் **45** வரையான வினாக்களுக்கு பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

| பிரதேசம் | சாஸ்திரிய நடனம் | இசைக்கருவி | ஆட்டவகை | கலைஞர் |
|---|---|---|---|---|
| **A** | குச்சுப்புடி | கடம் | தரங்கம் | டாக்டர். ஸ்ரீ வேம்படி சின்ன சத்யம் |
| வடஇந்தியா | **B** | தபேலா | தரனா | பிரகர்ஜி மகராஜ் |
| மணிப்பூர் | மணிப்புரி | **C** | கர்தார் | நாபகுமார் சிங்க |
| கேரளா | மோகினியாட்டம் | பஞ்ச வாத்தியம் | **D** | இட்டிராரிச்ச மேனன் |
| ஒரிசா | ஒடிசி | சாரங்கி | பூமிப்ராணம் | **E** |

**41.** **A** இல் இடம்பெற வேண்டிய பிரதேசம்
(1) தமிழ்நாடு (2) ஆந்திரா (3) கேரளா
(4) இம்பால் (5) உத்தர பிரதேசம்


**42.** **B** இல் இடம்பெற வேண்டிய சாஸ்திரிய நடனம்
(1) கதகளி (2) பரதநாட்டியம் (3) கதக்
(4) கண்டிய நடனம் (5) தாசியாட்டம்

**43.** **C** இல் இடம்பெற வேண்டிய இசைக்கருவி
(1) இடக்கை (2) செண்டை (3) கொம்பு
(4) கெஞ்சிரா (5) கடம்

**44.** **D** இல் இடம்பெற வேண்டிய ஆட்டவகை
(1) பந்தாட்டம் (2) பாமாகலாபம் (3) ராசலீலை
(4) இஷ்ட தேவதா வந்தனம் (5) வைஹேரபா

**45.** **E** இல் இடம்பெற வேண்டிய கலைஞர்
(1) தோம்பா ஹயோபம் (2) கல்கபிரசாத்
(3) பேரய்யா சாஸ்திரி (4) பிந்நதின்
(5) சம்யுக்தா

**46.** இப்படத்தில் காட்டப்பட்டுள்ள திருவுருவத்தின் தூக்கிய திருவடி குறித்து நிற்பது



(1) அருளல்
(2) மறைத்தல்
(3) காத்தல்
(4) படைத்தல்
(5) அழித்தல்

[பக். 6 ஐப் பார்க்க

**47.** இப்படத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ரஸத்திற்கு எதிர் ரஸமாக அமைவது



(1) வீர ரஸம்
(2) ரௌத்ர ரஸம்
(3) பயானக ரஸம்
(4) கருணை ரஸம்
(5) சிருங்கார ரஸம்

**48.** இப்படத்தில் காட்டப்பட்டுள்ள கலைஞருக்கு அரசரால் வழங்கப்பட்ட பட்டம்



(1) கலாகீர்த்தி
(2) கீதாஞ்சலி
(3) சங்கீத சாகித்ய பரத சிரேட்டர்
(4) பாரத ரத்னா
(5) கலாபூஷணம்

**49.** இப்படத்தில் காட்டப்பட்டுள்ள தோற்கருவி திணைப்புலங்களில் பயன்படுத்தப்படும்போது அழைக்கப்படும் பெயர்



(1) போர்ப்பறை
(2) வெருடப்பறை
(3) மருதநிலப் பறை
(4) முல்லைநிலப் பறை
(5) பாலைநிலப் பறை

**50.** இப்படத்தில் காட்டப்பட்டுள்ள சாஸ்திரிய நடனத்தில் பிரசித்தி பெற்ற கலைஞர்கள்



(1) டாக்டர் ஸ்ரீ வேம்படி சின்ன சத்தியம், லக்சுமி நாராயண சாஸ்திரி
(2) பிந்நதின், பிரகர்ஜி மகராஜ்
(3) நாபகுழார் சிங்க, தோம்பா ஹயோபம்
(4) பாலசரஸ்வதி, ருக்மிணி தேவி
(5) இட்டிராரிச்ச மேனன், புதியக்கல்தம்பான்

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka
ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

නර්තනය (භරත) II
நாட்டியம் (பரதம்) II
Dancing (Bharatha) II

53 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ **பகுதி I** இல் **முதலாம்** வினா உட்பட **இரண்டு** வினாக்களையும் **பகுதி II** இல் எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) மிஸ்ர அலாரிப்பினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக. (08 புள்ளிகள்)

(ii) நீர் கற்ற பதவர்ணத்தின் இராகம், தாளம் என்பவற்றினைக் குறிப்பிட்டு அதன் அனுபல்லவிப் பகுதியில் அமைந்த முதலாவது தீர்மானத்தினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக. (12 புள்ளிகள்)

**2.** (i) ஒடிசி நடனத்தின் தோற்றம் பற்றிச் சுருக்கமாகத் தருக. (03 புள்ளிகள்)

(ii) ஒடிசி நடனத்திற்குப் பயன்படுத்தப்படும் இசை, இசைக்கருவிகள் என்பன பற்றிக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) ஒடிசி நடனத்தின் ஆடை, அணிகலன்கள் என்பன பற்றி விவரிக்குக. (04 புள்ளிகள்)

(iv) ஒடிசி நடனத்தின் ஆட்ட முறைகள் பற்றி விவரிக்குக. (05 புள்ளிகள்)

(v) ஒடிசி நடனம் வளர்ச்சி அடைந்த விதம் பற்றி விவரிக்குக. (05 புள்ளிகள்)

**3.** (i) சிருங்கார ரஸத்தின் ஸ்தாயி பாவம், இறைவன், நிறம், எதிர்ரஸம் என்பவற்றைத் தருக. (02 புள்ளிகள்)

(ii) சிருங்கார ரஸத்தின் வகைகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) மேலே (ii) இல் குறிப்பிட்ட சிருங்கார ரஸத்தின் வகைகளை விரிவாக விளக்குக. (15 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

## பகுதி II

**4.** கண்டிய நடனத்தில் இடம்பெறும் சாஸ்திரிய உருப்படிகள் **இரண்டினைக்** குறிப்பிட்டு, பதினெட்டு வகையான வண்ணங்கள் பற்றி விவரிக்குக. (20 புள்ளிகள்)

**5.** (i) சோழர் காலக் கல்வெட்டுக்கள் ஆடற்கலைஞர்களைக் குறிப்பிடும் பெயர்களில் **மூன்றினைத்** தருக. (03 புள்ளிகள்)

(ii) சோழர் காலத்தில் ஆடப்பட்ட இருவகை அகக் கூத்துக்களையும் குறிப்பிட்டு அவற்றினை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iii) சோழர் காலத்தில் ஆடல் நிகழ்த்தப்பட்ட அரங்குகள் பற்றி விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) தளிர்ச்சேரிக் கல்வெட்டுக்களில் காணப்படும் ஆடற்குறிப்புகள் பற்றி விவரிக்குக. (07 புள்ளிகள்)

**6.** (i) ஸ்ரீமதி ருக்மிணிதேவி அருண்டேல் அவர்களின் வாழ்க்கை வரலாற்றினைச் சுருக்கமாகத் தருக. (10 புள்ளிகள்)

(ii) அவர் பரத நாட்டியக் கலை வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளை விவரிக்குக. (10 புள்ளிகள்)

**7.** யூரியுப் (YouTube) காணொளியில் பதிவேற்றம் (upload) செய்யப்படும் கலை சார்ந்த ஆற்றுகைகளைப் பயன்படுத்துதல் கலைகளின் வளர்ச்சியில் எவ்விதம் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதை விரிவாக ஆராய்க. (20 புள்ளிகள்)

**8.** பின்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) நாட்டிய சாஸ்த்திரம்

(ii) பயானக ரஸம்

(iii) ஒளியமைப்பின் நன்மைகள்

(iv) ஆனந்த தாண்டவம் ($5 \times 4 = 20$ புள்ளிகள்)

* * *